**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 147 of 2023**

**Prosecution Witness : PW7**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: பெரியசாமி** | **Taluk** | **:** |
| **Father's Name** | **:** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Age** | **:** |

**(Accused Present)**

**Dated.23.07.2025**

**முதல் விசாரணை**

நான் அடைக்கம்பட்டியில் வசித்து வந்து அம்மன் தனியார் பேருந்தில் நடத்துனராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் நான் நடத்துநராக இருந்து வந்த அம்மன் பேருந்தில் ஓட்டுநராக வேலை செய்து வந்தார். விபத்தில் இறந்துபோன ஜான் பிரான்சிஸ் என்பவரை எனக்கு தெரியாது. நாங்கள் பேருந்தினை காலை 07.25 மணிக்கு பெருவளப்பூரிலிருந்து TN 46 P 5445 என்ற பதிவெண் உடைய அம்மன் பேருந்தினை இலால்குடி வழியாக திருச்சி, சத்திரம் பேருந்து நிலையம் சென்றபோது, காலை 08.30 மணியளவில் நான் பயணிகளுக்கு பின்பக்க படிகட்டிலிருந்து டிக்கெட் போடுவதற்காக சென்றபோது, பத்மாவதி பேலஸ் அருகே பேருந்து சென்றபோது, பேருந்தானது சாலையின் மண்ரோட்டில் நின்றது. நான் என்னவென்று நானும், பயணிகளும், எதிரியும் பேருந்திலிருந்து இறங்கி பார்த்தபோது, ஒரு நபர் இரத்த வெள்ளத்துடன் கிடந்தார். அதன்பிறகு ஆம்புலன்ஸ் மூலமாக

சம்பவ இடத்தில் இறந்த நபரை கொண்டு சென்றதாக கேள்விபட்டேன். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

<u>கு.வி (அரசு தரப்பில்)</u>

கடந்த 01.06.2023 ம் தேதி காலை பெருவளப்பூரிலிருந்து பயணிகளை ஏற்றிக் கொண்டு காலை 08.30 மணியளவில் திருச்சி செல்வதற்காக டோல்கேட்டிலிருந்து இலால்குடி ரோடு வாளாடி பத்மா பேலஸ் திருமண மண்டபம் அருகில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி எதிரியானவர் வண்டியை ஓட்ட, நான் நடத்துனராக சென்று கொண்டிருந்தோம் என்றால் சரிதான். எதிரியானவர் பேருந்திற்கு முன்னால் சென்ற வாகனத்தை முந்துவதற்காக ரோட்டில் வலதுபுறமாக பேருந்தை அதிவேகமாவும், கவனக்குறைவாகவும் ஓட்டி சென்று ரோட்டின் ஓரமாக வந்த TN 48 BX 4308 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதில் பஸ் கண்ணாடி உடைந்து ஜான் பிரான்சிஸ் இருசக்கர வாகனத்துடன் கீழே விழுந்துவிட்டார் என்றால் சரியல்ல. ஜான் பிரான்சிஸ்க்கு வலது பக்க கண், வாயின் வலது பக்கம் சிதைந்தும், மார்பின் வலதுபக்கம், இடது கால், தலை, வலது பக்கம் இரத்த காயம் ஏற்பட்டு மூளை வெளியில் வந்தும், கழுத்து, வலது முழங்கை, இடது கை மணிக்கட்டு, வலது கால் பாதம், வயிற்றின் இடது பக்கம் காயம் ஏற்பட்டு பேச்சு, மூச்சு இல்லாமல் இருந்தார் என்றால் சரியல்ல. மேற்படி விசயங்களை போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரியானவர் நான் பணிபுரிந்த பேருந்தின் ஓட்டுநர் என்பதால் அவரை

வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்பதற்காக நேரில் பார்த்த விவரங்களை மறைத்து உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை(எதிரி தரப்பில்)– இல்லை</u>**

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

நீதித்துறை நடுவர்,
இலால்குடி

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 147 of 2023**

**Prosecution Witness : PW8**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: ஜோயல் சுந்தர்ராஜ்** | **Taluk** | **:** |
| **Father's Name** | **:** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Age** | **:** |

**(Accused Present)**

**Dated.23.07.2025**

**முதல் விசாரணை**

நான் திருச்சி கிராப்பட்டியில் வசித்து வந்து கணினி ஆப்பரேட்டராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 யை எனக்கு தெரியும். விபத்தில் இறந்துபோன ஜான் பிரான்சிஸ் எனது மாமா ஆவார். கடந்த 01.06.2023 ம் தேதி எனது மாமா அ.சா.1 யை தனலெட்சுமி ஸ்ரீனிவாசன் மருத்துவமனையில் இருசக்கர வாகனத்தில் அழைத்து சென்று விட்டுவிட்டு திரும்ப வீட்டிற்கு வருவதற்காக டோல்கேட்–இலால்குடி செல்லும் சாலையில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி சாலையின் வலதுபுறம் வந்தபோது, வாளாடி பத்மா பேலஸ் அருகே காலை 08.30 மணியளவில் வந்தபோது அவருக்கு எதிர் திசையில் வந்த அம்மன் தனியார் பேருந்தானது வேகமாகவும், கவனக்குறைவாகவும் வந்து எனது மாமா சென்ற இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக சம்பவ இடத்தில் இருந்த அ.சா.6 போன் மூலமாக தகவல் சொன்னார். சம்பவம் நடைபெறும் போது நான் எனது வீட்டில் இருந்தேன். சம்பவம் கேள்விபட்டு

சம்பவ இடத்திற்கு வந்து பார்த்தபோது, ஏற்கனவே எனது மாமாவை இலால்குடி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றுவிட்டதாக அ.சா.6 சொன்னார். அதன்பிறகு நான் இலால்குடி அரசு மருத்துவமனை சென்று எனது மாமாவை பார்த்தபோது அவருக்கு மூளை வெளியே வந்திருந்தது. கண் முழுவதுமாக காயம் ஏற்பட்டிருந்தது. மார்பு, கால் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டு இறந்திருந்தார். பிரேத பரிசோதனைக்கு பின் எனது மாமாவின் உடலை பெற்றுக் கொண்டோம். போலீசார் விசாரிக்க விவரம் சொன்னேன்.

**<u>குறுக்கு விசாரணை(எதிரி தரப்பில்)</u>**

நான் முதல் விசாரணையில் சொல்லிய விவரங்களை தான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என்னை எப்போது விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள் என்றால் இலால்குடி காவல் நிலையத்தில் இருக்கும்போது விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள்.

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

நீதித்துறை நடுவர்,
இலால்குடி

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 147 of 2023**

**Prosecution Witness : PW9**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: மார்ட்டின் ஜெயராஜ்** | **Taluk** | **:** |
| **Father's Name** | **:** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Age** | **:** |

**(Accused Present)**

**Dated.23.07.2025**

**முதல் விசாரணை**

நான் திருச்சி கிராப்பட்டியில் வசித்து வந்து தனியார் கம்பெனியில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 யை எனக்கு தெரியும். விபத்தில் இறந்துபோன ஜான் பிரான்சிஸ் எனபவரை தெரியும். கடந்த 01.06.2023 ம் தேதி ஜான் பிரான்சிஸ் அ.சா.1 யை காலை தனலெட்சுமி மருத்துவக் கல்லூரியில் இருசக்கர வாகனத்தில் வேலைக்காக அழைத்து சென்று அவரை விட்டுவிட்டு சமயபுரத்திலிருந்து இலால்குடி செல்லும் சாலையில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி கீழ வாளாடி பத்மா பேலஸ் அருகே ஜான் பிரான்சிஸ் காலை 08.30 மணியளவில் வந்தபோது, எதிர்புறமாக வந்த தனியார் பேருந்தானது வேகமாக வந்து ஜான் பிரான்சிஸ் மீது மோதி விபத்து ஏற்பட்டதாக அ.சா.1 போன் மூலமாக தகவல் சொன்னார். சம்பவம் நடைபெறும் போது நான் எனது ஊரில் இருந்தேன். ஜான் பிரான்சிஸ் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். பின்னர் நான் அவரை இலால்குடி அரசு மருத்துவமனை சென்று பார்த்தபோது,

அவருக்கு மூளை வெளியே வந்திருந்தது. அவரது வலது பக்க முகம், கை, கால் ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டிருந்தது. பிரேத பரிசோதனைக்கு பின் அவரது உடலை பெற்றுக் கொண்டோம். போலீசார் விசாரிக்க விவரம் சொன்னேன்.

<u>குறுக்கு விசாரணை(எதிரி தரப்பில்)</u>

வழக்கு சம்மந்தமாக போலீசார் என்னை எப்போது விசாரணை செய்தார்கள் என்றால் சம்பவ தினத்தன்று காவல் நிலையத்தில் வைத்து காலை 10 மணியளவில் விசாரணை செய்தார்கள்.

ஒப்பம்/–சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/

நீதித்துறை நடுவர்,
இலால்குடி